1979 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஈ) மின்வெட்டு காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு காரணமாக மின்சார மோட்டார்களில் காயில் தீய்ந்து நீர் இறைக்க முடியாமல் போனதினாலும், அதனால் பயிர்கள் காய்ந்து விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இருக்கும் பதட்ட நிலை குறித்து வ்வாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு....

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி, சி. கோவிந்தராசன், வீ. கே. கோதண்டராமன், கு. ரமணி, ஆர். கிருஷ்ணன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஆ. நடராசன், துரை முத்துசாமி, ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டைமான், ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் கூட காலையில் பேரவைத் தலைவரிடம் கொடுத்து இருக்கிறேன். அவரும் உடனே அட்மிஷன் போட்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, திரு. திருவேங்கடம் அவர்களும் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்....

[முற்பகல் 11-50]

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மின்வெட்டு சம்பந்தமாகவும், கெரோசின் தட்டுப்பாடு சம்பந்தமாகவும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மின்வெட்டு சம்பந்தமாக உள்ளதை மட்டும் இப்போது எடுத்திருக்கிறார்கள்,

[திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்] [1979 மார்ச் 27

இப்போதுள்ள நிலைமையில் மின்சாரமும் கெரோசினும் மிக முக்கியமாக மக்களுக்குத் தேவைப்படுகின்றன. ஏழைகளாக இருந்தாலும் சரி, பணக்காரர்களாக இருந்தாலும் சரி, எல்லோருக்கும் இந்த இரண்டும் மிக மிக முக்கியமானது.

இன்றைக்கு மின்வெட்டு தமிழ்நாடு பூராவும் இருந்தாலும் குறிப்பாக எங்கள் பகுதியிலே ஏழைகளும், பணக்காரர்களும், வீட்டுச் சொந்தக்காரர்களும், விவசாயிகளும் பெருத்த கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எந்த நிமிடத்தில் மின்வெட்டு வரும் என்று தெரியாது.

சமீபத்தில்கூட கால்நடைத் துறை சம்பந்தப்பட்ட ஒரு விழாவுக்கு சென்றிருந்தேன். கால்நடைத் துறை இயக்குநர் கூடுதல் இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் எல்லோரும், அந்த விழாவுக்கு வந்திருந்தார்கள். 7 மணிக்கு விழா தொடங்கியது. தொடங்கி சிறிது நேரத்தில் மின்வெட்டு ஏற்பட்டது. 8½ மணிக்கு மீண்டும் வந்தது. நான் வீட்டுக்குப்போய் சாப்பிடும்போது 10 மணி. அப்போது மின்வெட்டு வந்துவிட்டது. இப்படி அடிக்கடி வருகிறது. எந்த சமயத்தில் மின்வெட்டு வருகிறது என்று தெரியவில்லை. ஒருநாள் 7மணிக்கு மின்வெட்டு என்றால் அடுத்த நாள் 9 மணிக்கு மின்வெட்டு. ஒரு நாள் பூராவும் இந்தமாதிரி ஏற்பட்டு மக்கள் பல்வேறு சங்கடங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அதனால் திருட்டுகள்கூட நடைபெறுகின்றன. அண்மையில் கும்பகோணம் பஸ் ஸ்டாண்டில் மின்வெட்டு ஏற்பட்ட நேரத்தில் ஒரு பெண்ணினுடைய கழுத்து செயினை அறுத்துக்கொண்டு போய்விட்டார்கள். நாங்கள் அங்கே இருக்கின்ற கஷ்டங்களை உணர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். மின்வெட்டு இங்கே இருக்கின்றவர்களுக்கு அவ்வளவாகத் தெரிவதில்லை. நாங்கள் கேட்கிறோமே என்பதற்காக நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்கிறீர்கள் ; குறிப்பாக தொலைபேசி மூலம் கேட்கிறீர்கள். அவர்கள் கொடுக்கின்ற பதிலை இங்கே தருகிறீர்கள். ஆனால் உங்களுக்கு உண்மை நிலைமை தெரிவதில்லை. ஆகையால் நாங்கள் இப்படிப்பட்டத் தீர்மானங்களைக் கொடுக்கும்போது நீங்கள் அதைப்பற்றி சி.ஐ.டி. மூலம் விசாரிக்க வேண்டும். அப்போதுதான் உண்மை நிலவரம் உங்களுக்குத் தெரியும்.

மின்வெட்டினால் இன்றைக்கு மிகவும் பாதிக்கப்பட்டிருப்பது எங்களுடைய பகுதி. எந்த நிமிடத்திலும் மின்வெட்டு வரலாம் என்ற நிலை இருப்பதால் மக்கள் பெருத்த கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகையால் ஒரு நாளில் எந்த எந்த நேரத்தில் மின்வெட்டு வரும் என்று முன்கூட்டியே தெரிவித்துவிட்டால் மக்கள் உஷாராக இருப்பார்கள். இதைப்

பற்றி எல்லாம் விரிவாகப் பேசி, தீர்வு காண்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் ஊரில் அரை லிட்டர் கெரோசின்தான் கொடுக்கிறார்கள் ஒரு வாரத்திற்கு. அது ஒரு பெரும் பிரச்சனையாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. நாங்கள் எல்லாம் கிராமத்திற்குப் போக முடியாத அளவுக்கு இன்றைக்கு அந்த பிரச்சனை இருக்கிறது. ஒரு வாரத்திற்கு அரை லிட்டர் கெரோசின் எப்படி போதும்? அது சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சனை சம்பந்தமாக திரு. விஜயரகுநாத தொண்டமான் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அவர்களுடைய பெயரையும் சேர்த்துக் கொள்கிறேன். ஒரு கட்சிக்கு ஒருவர்தான் பேசலாம் என்று முடிவு செய்திருப்பதால் அவர்களுக்கு இந்தத் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன்: துணைத் தலைவரவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு பூராவும் இந்த மின்வெட்டு இருக்கிறது. மின்சாரப் பற்றாக் குறை ஏற்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். 'ஸ்டாகரின்' முறையில் மின்சாரம் கொடுக்கப்படுவதால் தமிழ்நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியான நெல்லிக் குப்பம், மற்றும் விக்கிரவாண்டி, செஞ்சி போன்ற பகுதிகளிலிருந்து மின்சார வெட்டு சம்பந்தமாக கடிதங்களும் தந்திகளும் வந்து கொண்டிருக்கின்றன. மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மின்சார வாரியத் தலைவருக்கும் அவர்கள் தந்திகளும் கடிதங்களும் அனுப்பியிருக்கிறார்கள்; செஞ்சியைச் சுற்றி ஏராளமான கிராமங்களில் மின் வெட்டின் காரணமாக விட்டுவிட்டு மின்சாரம் கொடுத்ததால் மோட்டார் சரியாக ஓடவில்லை; எரிந்துபோகின்றன. குறிப்பாக எதப்பட்டு என்ற கிராமத்தில் மட்டும் சுமார் 200 மோட்டார்கள் எரிந்து போய் விட்டன; இதனால் சுமார் 80,000 ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக செய்தி வந்திருக்கிறது. அது மாத்திரம் அல்ல, அதே பிரதேசத்தில் சுமார் 1,000 ஏக்கர்கள் பம்ப்செட் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் மூலமாகப்பயிரிடப்படுகிறது. அவர்களுக்கு போதிய மின்சாரம் கிடைக்காத காரணத்தால் அங்கே பயிர்கள் எல்லாம் காய்ந்து விட்டன. அதன்படி அவர்கள் கொடுக்கின்ற கணக்கு அந்த ஆயிரம் ஏக்கரிலே சுமார் பதினெட்டே முக்கால் இலட்சம் என்ற அளவுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

அதைவிட அதிகமாகவோ அல்லது அந்த அளவுக்கோ நஷ்டம் இருக்கலாம் என்பதை ஒத்துக்கொள்ளமுடியும். இது சம்பந்தமாக-10—3—79 அன்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கும், மின் வாரிய தலைவரவர்களுக்கும் கடிதங்கள், தந்திகள் அவர்கள் அனுப்பியிருக்கின்றனர். ஆனாலும் இதுபற்றி எந்தவிதமான துரிதமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. பயிர்கள் காய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மகசூலே பாதிக்கப்படப் போகிறது. ஆகவே காலதாமதம் செய்வதால் பலன் இல்லை. இதற்கு உடனடியாக என்ன செய்ய வேண்டும் என்பதைப் பார்க்க வேண்டும். ட்ரான்ஸ்பார்மரின் ஆம்ஸை அதிகப்படுத்த வேண்டும். அதிலே போதிய லோட் கொடுக்க வேண்டும். மின்சாரத் துறை ஒரே ஸ்ட்ரெட்சில் கொடுக்க வேண்டும். மின்சாரத்தை விட்டு விட்டு வினியோகிக்கக் கூடாது. அது மட்டுமல்ல. பம்ப் செட் வைத்திருக்கக் கூடிய விவசாயிகளுக்கு விசேஷ சலுகை என்ற பெயராலே ப்ரையாரிட்டி கொடுத்து மின்சாரம் அதிகமாக வழங்க வேண்டும். மின்சாரத் துறை அதிகாரிகளிடம் இது பற்றிக் கூறப்படும் போது அவர்கள் மிகவும் அலட்சியமாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு அக்கறை இருந்தாலும் அதிகாரிகள் அலட்சியமாக இருக்கிறார்கள். ஆகவே அந்த விவசாயிகளுக்குப் போதிய வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும், இது சம்பந்தமாக தகுந்த ஆலோசனைகளை எடுத்துச் சொல்வதற்காகவும் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இன்றைக்கு இந்த அவையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற தீர்மானம் மிக முக்கியமான தீர்மானம். பொதுவாக தமிழ்நாட்டில் பொருளாதார முன்னேற்றத்திற்கு, தேசிய வளர்ச்சிக்கு அடிப்படையான மின்சாரம் கொடுக்கப்படுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த சிக்கல்களைப் பற்றி விவாதிக்க இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அமைச்சரவர்கள் மின்சாரத்துறையைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள். அவர்கள் இருக்கும்போதே இவ்வாறு நடைபெறுகிறதே என்பதை எண்ணிப் பார்க்கும்போது மிகவும் வேதனை அடைகிறேன்.

இன்றைக்கு ஏற்கனவே மின் துண்டிப்பு பிரச்சினை இருக்கிறது. ஆனால் இங்கே இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் கிடைக்கின்ற மின்சாரம் சரிவரக் கிடைக்காத காரணத்தால் விவசாயிகள் கஷ்டத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பது.

1979 மார்ச் 27] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

இந்தப் பிரச்சினை குறித்து கடந்த 8-ஆம்தேதியே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தார். அந்தப் பிரச்சினைக்கு 20-ஆம் தேதிதான் பதிலளிக்கப்பட்டது. அப்போது சொன்னார்கள் 16-ஆம் தேதியிலிருந்து நிலைமை சீரடைந்து வருகிறது என்று. மின்சாரம் சரிவர வராத காரணத்தினால் 51 பம்ப் செட்டுகளுக்கு மேல் காயில்கள் எரிந்து விட்டன. இந்த நிலைமை அங்கே மாத்திரம் அல்ல. திருவண்ணாமலை, கலசபாக்கம், தண்டராம்பட்டு, செய்யாறு, பெரணமல்லூர், செங்கம், போளூர், போன்ற பகுதிகளிலும் இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மதுரைப் பகுதியிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுடைய பகுதியிலே திருமங்கலம் போன்ற இடங்களில் இந்த மாதிரி நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. செய்யாறு பகுதி பற்றி நம்முடைய புலவர் கோவிந்தன் அவர்கள் பலமுறை எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இப்படி பல இடங்களிலும் காயில்கள் தீய்ந்துபோயிருக்கின்றன. மின்சாரம் சரிவரக்கிடைத்தால் உற்பத்தி சரியாக நடைபெறும். விவசாய உற்பத்தி இன்றைக்கு தடைப்பட்டிருப்பதை மிகுந்த வேதனையோடு சொல்லிக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினை இப்போது வந்ததல்ல. இது 8ஆம் தேதியே வந்துவிட்டது. இன்றைக்கு 27-ஆம் தேதி வரை நடந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 20 நாட்களாக இந்தப் பிரச்சினை இருந்து வருகிறது. இப்போது இருக்கின்ற மின்சார உற்பத்தி 1344 மெகாவாட். ஆனால் நமக்கு தேவையான மின்சாரத்தின் அளவு 1800 மெகாவாட். ஏறக்குறைய 544 மெகாவாட் நமக்கு பற்றாக்குறை ஏற்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு பக்கத்து மாநிலங்களிலே இருந்து உடனடியாகப் பெற்று விவசாயிகள் பாதிக்காத அளவில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இப்போது எவ்வளவு உற்பத்தி, எவ்வளவு தேவை என்பதெல்லாம் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் அறிக்கை வைக்கின்ற போது மின்சாரம் காலையிலே 4 மணி நேரம் மாலையிலே 6 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் சில இடங்களிலே அரை மணி நேரம் தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. அதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு போதிய மின்சாரம் கொடுத்து உற்பத்தி பாதிக்காத அளவில் நடவடிக்கைகளை எடுப்பதற்காக இங்கே விவாதிக்க வேண்டி இருக்கிறது. அதுமட்டுமல்ல, பம்ப் செட்டுகளின் காயில் எரிந்து போய் இருப்பதற்கெல்லாம் மின்சாரத் துறைதான் பொறுப்பு. அவர்கள் போதிய மின்சாரம் சப்ளை செய்திருந்தால் அவ்வாறு காயில்கள் எரிந்து போய் இருக்காது. ஆகவே மின்சாரத் துறை தான் பொறுப்பு. ஆகவே அந்தக் காயில்களையும் மின்சாரத் துறையினர் தான்

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1979 மார்ச் 27

போட்டுத் தரவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும், என்ற கோரிக்கையை இங்கே நான் எடுத்து வைக்க விரும்பு கிறேன்.

(நண்பகல் 12-00)

ஒரு குறிப்பிட்ட மணி நேரமாவது விவசாயிகளுக்கு மின் சாரம் கொடுக்கப்பட வேண்டும். தேவையானால், தொழிற் சாலைகளுக்கு மின்சாரத்தை நிறுத்தி, விவசாயத்திற்கு முன்னுரிமை தரலாம். இப்போது பொதுவாக ஒரு கருத்து நிலவுகிறது. அது என்னவென்றால், விவசாயிகளைப் பழி வாங்க வேண்டும். 'அன்-டிக்ளேர்ட் வார்' செய்யப்படுவது போல், மின்சாரத் துறையினர் இயங்கி வருகின்றார்கள். இந்த மின் பிரச்னையைப் பற்றி அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசினார்கள் என்று பத்திரிகையிலே பார்த்தேன். அன்றைய தினம் முடிவு செய்தபடி, பற்றாக் குறை வராது என்று சொல்லி விட்டு, மறைமுகமாக இப்படி செய்வது சரியல்ல. ஆகவே, அவர்களுக்கு நாளையிலிருந்து, 12 மணியிலிருந்து விவசாயி களுக்குப் போதுமான தேவையான மின்சாரம் கொடுக்கப்படும் என்ற ஒரு உறுதியைச் சொல்ல வேண்டும். அந்த அளவிலே சொன்னால், நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த மாட் டேன் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. செ. சிவசாமி:</u> பெருமதிப்பிற்குரிய உதவித் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் பல தடவை நமக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த ஆண்டு மின்சார வெட்டு இருக்காது என்று சொன்னார்கள். ஆனால், இது பொய்த்து விட்டது. அவர்கள் என்ன எண்ணத்தோடு அந்த வாக்குறுதியைக் கொடுத்தார்களோ அந்தக் காரியம் நடை பெறவில்லை. விவசாயம், இந்த நாட்டில் முக்கியம் என்பதை யாவரும் அறிவர். எனக்கு முன்னே பேசிய அங்கத்தினர்கள் சொன்னதுபோல், எங்கு பார்த்தாலும் காயில்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல், குறித்த காலத்திலே ஒரு நாளைக்கு 4 அல்லது 5 மணி நேர மாவது மின்சாரத்தை ஒழுங்காகக் கொடுக்க வேண்டும். மின் சார வெட்டு இல்லை என்று சொல்லி விட்டு, பயிர் செய்வதற் காக மோட்டார் சுவிச்சை 'ஆன்' பண்ணினால் அது ஓடுவதில்லை அப்படி ஓடினாலும் காயில் உடனே எரிந்து விடுகிறது. அது மட்டுமல்ல. அதனால், தண்ணீர் பயிர்களுக்கு பாதி தூரம்கூட போவதில்லை. அரை மணி நேரம் கூட தண்ணீர் ஓட, மின் சாரம் கொடுப்பதில்லை. இப்படிப்பட்ட பல தொந்தரவுகள் அங்கே இருக்கின்றது. கல்யாண நேரத்திலே கூட, தாலி கட்

டும்போது லைட் போய் விடுகிறது. ஒரு அபசகுனமான நிலை ஏற்படுகிறது. அது மட்டுமல்லாமல், கடைவீதிகளுக்குச் செல்லுகின்ற போது. சாமான்கள் வாங்கிக் கொண்டிருக்கும் போது, திடீரென்று மின் விளக்குகள் அணைந்து விடுகின்றன. அப்போது என்ன சாமான்கள் வாங்கினோம் என்பதுகூட தெரிவதில்லை. அதுபோல சாப்பிடும்போது கூட விளக்கு அணைந்து விடுவதால் என்ன பதார்த்தங்கள் இருக்கின்றன என்பதுகூட தெரியாத ஒரு நிலைமை ஏற்படுகின்றது. இப்படி கிராமங்களிலே பல கஷ்டமான நிலைமைகள் இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தும், இந்த தமிழக மக்கள் இன்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நிவர்த்திக்கின்ற முறையில், அதை ஒழுங்குபடுத்தி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் தவிர, தமிழகத்திலே அதிகப்படியான மின் உற்பத்தியைச் செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், நமக்கு இதே சீசனில் மின்சாரப் பற்றாக் குறை ஏற்படுகிறது. அப்படி வரக்கூடிய காலத்திலே, அதைப் போக்குவதற்கு மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான அடிப்படையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள், குறிப்பிட்டதைப் போல் இது ஒரு முக்கியமான தீர்மானம் என்பதில் எந்தவிதமான ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. கடந்த சில நாட்களாக தமிழகத்தின் பல்வேறு நிறுவனங்களில் மின் துண்டிப்பு ஆங்காங்கு இருந்து வந்தன. முன்னறிவிப்பின்றி இது ஏற்பட்ட காரணத்தால் பல தொல்லைகளுக்கு ஆளானார்கள் என்பதை நானே அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல் திருமண நேரங்களில் தாலி கட்டும்போது மின்சாரம் இல்லாமல் போவது அபசகுனமாக போய்விடுகிறது என்று சொன்னார்கள். பொதுவாக திருமணங்கள் இரவில் நடைபெறுவதில்லை. பகல் நேரங்களில்தான் நடைபெறுகின்றன. ஆகவே (குறுக்கீடு) முஸ்லீம் திருமணங்களில் தாலி கட்டுகிறார்களா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் திருமண நேரங்களில் மின்சாரம் தடையின்றி தரப்படும் என்ற உறுதியை தர நான் கடமைப்பட்டிருக்கிறேன். சாதிக் பாட்சா அவர்கள் குறிப்பிடும் பொழுது, விவசாயிகளுக்கு இதனால் பெருத்த இழப்பு ஏற்படுகிறது என்றும், ஒரு வேளை அந்த விவசாயிகள் மீது ஒரு மறைமுகமான போரை தொடுத்திருக்கிறதோ என்று ஐயப்படுவதாக கூறினார்கள். 'அன்-டிக்ளேர்ட் வார்' என்பது தமிழர்களின் பண்பு அல்ல. விரும்பினால் 'We always declare war' மறைந்திருந்து தாக்குவது தமிழர்களின் பண்பு அல்ல. வேண்டுமென்றால் போராட்டத்தை நேரடியாகவே சந்தித்துப் பழக்கப்

பட்டது தான் இந்த அரசு. இருந்தாலும் இந்த அரசு இப்படிப் பட்ட நிலையை ஆராய வேண்டியிருக்கிறது. நேற்றைய தினம் மின்வாரிய அதிகாரிகளை வரவழைத்து என்ன நிலைமை, எப்படி இதை சமாளிக்க வேண்டும் என்பதையெல்லாம் ஆலோசனை செய்து சில முடிவுகளை எடுத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், ஓரளவுக்கு உச்ச தேவை யில் பற்றாக்குறை இருக்கிறது. உச்ச தேவையில் பற்றாக்குறை இருப்பதால், விவசாயத்துறையில் குறைப்பதா அல்லது தொழில் துறையில்—குறிப்பாக பெருந் தொழில்களில் குறைப்பதா என்பதையெல்லாம் பரிசிலீத்தோம். மின்சார சக்தியைப் பொறுத்தளவில்—எனர்ஜியை—பொறுத்தளவில்— ஷார்ட்டேஜ் இல்லை. மேக்ஸிமம் டிமான்டைப் பொறுத்தளவில் தான் ஷார்ட்டேஜ் இருக்கிறது. இதை விரிவாக ஆராய்ந்து, முக்கிய மாக வேளாண்மைக்கும் கிராமப்புறங்களுக்கும் முன்னுரிமை தரவேண்டும் என்ற அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை உங்கள் அனுமதியோடு வாசிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு மின் இணையத்தில் உச்சத் தேவை (மாக்ஸிமம் டிமான்ட்) உற்பத்தியை விட மிஞ்சியுள்ளதால் இம்மாதத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு இடங்களில் முன் அறிவிப்பு இன்றி மின் துண்டிப்புகள் மேற் கொள்ள வேண்டியிருக்கிறது.

மின் உற்பத்தி 1,450 மெகாவாட் ஆனால் மின் உச்சத் தேவை 1,560 மெகாவாட். ஆகவே 200 மெகாவாட் ஈடு செய்ய வேண்டியுள்ளது. நெய்வேலி அனல் மின் திட்டத்தில் ஓரளவு நிலக்கரி பற்றாக்குறை காரணமாகவும் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் சில தொழில் நுட்ப குறைபாடுகளின் காரண மாகவும் மின் உற்பத்தி குறைந்துள்ளது. 1978 டிசம்பர் மாதத்தில் உற்பத்தியை துவங்க இருந்த தூத்துக்குடி அனல் மின் நிலையத் திட்டம் சில ஆரம்ப சிக்கல்கள் காரணமாக இவ்வாண்டு மே திங்களில் தான் 210 மெகாவாட் மின்சக்தியை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே இக் கோடை காலத்திற்குப் பயன் அளிக்காது.

இவ்வுச்சத் தேவையை சரிகட்ட உயர் அழுத்த தொழில் நுகர்வோர் பயன்படுத்தும் உச்சத் தேவையை ஓரளவுக்கு குறைப் பது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதற்கொப்ப தொடர் முறை தொழில்களுக்கு (எச்.டி. இன்டஸ்ட்ரீஸ்) அவைகளது உச்சத் தேவையில் 15 சதவீத வெட்டும், தொடரா முறை தொழில்களுக்கு அவைகளது உச்சத் தேவையில் 30 சதவீதம் வெட்டும், உடனடியாக அமல் படுத்தப்படும். இது இன்று பகல் 12 மணியிலிருந்து அமல் படுத்த வேண்டும் என்று இருந் தோம். சாதிக் பாட்சா அவர்கள் உடனடியாக அமல்படுத்தப்

படவேண்டும் என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் இடையில் பேச நேர்ந்ததால் சற்று காலம் தாழ்ந்து, இப்போதிருந்து உடனடியாக அமல் நடத்தப்படும்.

இவ்வுச்சத் தேவையின் பேரில் விதித்துள்ள மின் வெட்டுக்களை மீறும் பெருந் தொழில்களின் மின் இணைப்பு துண்டிக்கப் படும். ஆனால் பயன்படுத்தும் மின்சக்தியில் எவ்வித மின்சார வெட்டும் இருக்காது.

தொடரா முறை தொழில்கள் தங்களது வார விடுமுறையை வாரம் முழுவதும் வருகின்ற வகையில் மாற்றி அமைத்துக் கொள்ளவேண்டும் என்றும், வாரவிடுமுறை இல்லாத தொழில்கள் வார விடுமுறை விடவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மேற்கூறிய மின்வெட்டு புகைவண்டி, விமானப் போக்கு வரத்துகள், மருத்துவ மனைகள், செய்தித் தாள்கள் போன்ற இன்றியமையாத தொழில்களுக்கு கிடையாது. சிறு தொழில்களுக்கும், குறைவு அழுத்த மின் நுகர்வோர்களுக்கும் இக்கட்டுப்பாடு அமலாகாது.

தங்கள் வசம் ஜெனரேட்டர் செட்டுகளை வைத்துள்ள மின் நுகர்வோர் அனைவரும் தங்களது மின் உற்பத்தி சாதனங்களை முழுமையாக பயன்படுத்தி மின்வாரிய இணையத்தின் சுமையை இயன்ற அளவு குறைக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படு கிறது. இவற்றிற்கு தேவையான அளவு டீசல் எண்ணெய் வழங் கிட வேண்டுமென மத்திய அரசை ஏற்கனவே தமிழ்நாடு அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழகத்தில், மின் உச்சத் தேவைகளை சமாளிப்பதற்கென வாயு மின் உற்பத்தி நிலையங்களை (கேஸ் டர்பைன்ஸ்) அமைக்க அனுமதி வழங்க மத்திய அரசை தமிழக அரசு கேட்டுக் கொள் ளும்.

உச்சத் தேவைகளின் மேல் விதிக்கப்பட்டுள்ள இம்மின் வெட் டினைத் தொடர்ந்து மின் இணையத்தின் உச்சத் தேவை குறைக்கப்பட்டு மின்சாரம் தடையின்றி விவசாயத்திற்கும் மற்று முள்ள மின் நுகர்வோருக்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஆகவே இதற்காக அவை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறி அமருகிறேன்.

[1979 மார்ச் 27

[பிற்பகல் 12–10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு: அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

உ. வடாற்காடு மாவட்டம், தி. அ. மங்கலத்தில் மின் துண்டிப்பு வேண்டாம் என முறையிட்ட விவசாயிகள் கைது செய்யப் பெறுவது குறித்து—

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், கீழ்க்கொடுங்களூர் அடுத்த தி. அ. மங்கலத்தில் மின் வாரியத்தினர் ஏப்ரல் 4-ந் தேதி முதல் மின் துண்டிப்பு இராது என அரசு கொடுத்த வாக்குறுதியை மதியாது மின் துண்டிப்பு செய்ய முற்படுவது அறிந்து மின்வாரிய அலுவலகம் சென்று துண்டிப்பு வேண்டாம் என முறையிட்ட விவசாயிகள் கைது செய்யப்பட்டது குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு,

1. திரு. ப. சுந்தரம்,

2. திரு. தா. வேணுகோபால்.

ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன், திரு. ப. சுந்தரம்.

திரு. ப. சுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி தாலூகாவிலுள்ள, கீழ்க் கொடுங்களூரை அடுத்த தி. அ. மங்கலத்தில் மின் துண்டிப்பு இராது என்று அரசு ஏப்ரல் 3-ம் தேதி ஆணையிட்டும், அதை மதியாது மின்சாரத் துறையினர் மின் துண்டிப்பை செய்து விட்டுப் போகும்போது, கொடுங்களூரைச் சேர்ந்த 15 விவசாயிகள் மின்சாரத் துறையினரிடம் முறையிட சென்றபோது, அந்த 15 விவசாயிகளை கைது செய்து, வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப் பட்டு, அவர்கள்மீது 141, 147, 353, 701 ஆகிய செக்ஷன்களை அவர்கள்மீது போட்டு, வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இதைப் பற்றி கேட்க விவசாயிகள் வந்தவாசி தாலூகா ஆபீசுக்கு முறையிடச் சென்ற போது, 1,000 விவசாயிகளை அந்த தாலூகா அலுவலகத்திற்குள்ளேயே அடைத்து வைத்து, அங்கே ஆயுதம் தாங்கிய 400 போலீசை